RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s222714

# திலகவதியின் உனக்காகவா நான் நாவல் செல்நெறிகள்

முு. சத்தியா [அ, *], சா. வனிதா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Thilakavathy's Unakagava Naan Novel

**M. Sathiya [a, *], S. Vanitha [a]**

[a] PG and Research Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: sathiyabsj@gmail.com

Received: 21-09-2022
Revised: 03-11-2022
Accepted: 05-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

The author of the novel Unkakagava Naan deals with the problems faced by women in the society and it also brings out how those women overcomes many obstacles and succeeds in life. This article highlights the sufferings of the woman named Pragathi in this novel. This article tells us that no matter how educated a woman is, she is always known for her beauty. And the author narrates her hardships from her father to the teacher who comes to teach her. It also highlights her migration from Tamil Nadu to Kolkata, marriage interrupted several times and waiting as an old woman. It captures her perspective on men. Later she married a boy named Tarun and expressed her love to him. Marrying someone who is less educated thanher and promoting him in life is a very great thing and she raised him to big level. The purpose of this article is to raise the status of the woman through her knowledge to fight the hardships.

**Keywords:** Feminism, Life, Old Maiden, Beauty, Companionship

## முன்னுரை

நாவல் என்பது ஒருவகை இலக்கியம். இவ்விலக்கியத்தில் சமூகம், குடும்பம், சமயம், அரசியல், பொருளாதாரம் என அனைத்து வகையான சிக்கல்களை பற்றியும், அவற்றை சிறப்பான முறையில் எடுத்து கூறும் இலக்கியம் உள்ளது. அந்த வகையில் ‘உனக்காகவா நான்’ என்ற நாவல் இலக்கியத்தில் குடும்பம், பெண்ணியம் பற்றி பேசும் நூலாக உள்ளது. அத்தகைய இந்நாவல் திலகவதி அவர்களால் எழுதப்பட்ட நாவல். சமுதாயத்தில் ஓர் சிறிய அமைப்பாகிய குடும்பம் சார்ந்த பெண்ணியத்தைப் பற்றிய பேசும் நாவலாக உள்ளது. இவ்வுலகில் ஆணின் துணை சார்ந்தே வாழ வேண்டும் என்பதும் அவளுக்கு படிப்பு என்பது எவ்வளவு இருந்தாலும் அவளின் உடலமைப்பு வைத்தே அதாவது அழகை வைத்தே அவளை அடையாளம் காணப்படுவதாகவும் அமைகிறது.

இன்றைய சமூகத்தில் சமூக பார்வையோடு மக்களின் நலன் கருதி எழுதும் எழுத்தாளர்களின் தலைச்சிறந்தவர்களாகவும், பெண்ணியம் சார்ந்த நூல்களை இவ்வுலகிற்கு தருவதில் மிகவும் முக்கிய சிந்தனையாளராக திகழ்ந்தவர் திலகவதி ஆவார். அவர் 1980 களில் இவ்வெழுத்துலகில் நுழைந்தவர். இவர் நாவல், சிறுகதை, கட்டுரை, சமூக அவலங்களை எடுத்துரைக்கும் பல கட்டுரைகளையும், பெண்களுக்கான எழுச்சி மிகு நூல்களை எழுதுவதில் ஆர்வம் மிக்கவராய் காணப்படுகிறார்.

## எது அழகு

அழகு… எது அழகு சிவந்த நிறமா? கூர்மையான மூக்கா? கயல் போன்ற கண்களா? வெள்ளை நிற உடல் அமைப்பா? விலை உயர்ந்த ஆடைகளா? அணிகலன்களா? இவை எல்லாம் அழகல்ல ஓர் பெண்ணுக்கு

"நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட

பார்வையுடன் கண்ணியம் காக்கும்

பெண்களே அழகு"

என்கிறார் ஆசிரியர் (Thilagavathy, 2007). கண்ணால் காணுகின்ற உருவம் தோற்றம் மட்டுமின்றி கண்ணுக்கு புலனாகாத குணம், எண்ணம், உணர்வு, பழக்க வழக்கம் என அழகை காணும் இடங்கள் பல உள்ளன. அதனால் தான் திருவள்ளுவர்.

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை

அகத்துறப்பு அன்பில்வர்க்கு அவர்க்கு"

என்ற குறள் மூலம் அழகு என்பது புறத்தோற்றம் சார்ந்தது அன்று அகம் சார்ந்த அக உறுப்பே என்கிறார் வள்ளுவர் (Varadharasan, 2004). இந்த அழகு என்பது எல்லா நாட்டிலும் எல்லா ஊர்களிலும் பெண்ணை அழகை வைத்தே அடையாளம் காணுகின்றனர். அந்த வகையில் தமிழ்நாட்டில் இருந்து கொல்கத்தாவிற்கு புலம் பெயர்ந்த பிரகதிக்கும் இந்த நிலைதான். அங்கும் அவளின் உடலமைப்பே வைத்தே அவள் பார்க்கப்படுகிறாள்.

## புலம் பெயர்ந்த குடும்பம்

புலம் பெயர்தல் என்பது ஓர் இனமோ அல்லது அவ்வினத்தின் 'ஒரு பிரிவினரோ வாழ்வாதாரம் தேடி வேறு நிலப்பிரதேசத்திற்கு சென்று வாழ்வதாகும். அவ்வாறு புலம் பெயர்ந்த குடும்பம் தான் பிரகதி அவளின் தாத்தா புலம்பெயர்ந்து கொல்கத்தாவில் குடியேறினார். அவரின் ஓயாத உழைப்பின் காரணமாக அங்கே நிலைத்ததொரு வசதியாக வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

இந்த புலம் பெயர்தல் என்பது இப்பொழுது ஏற்பட்ட ஒன்று அன்று. அவற்றைப் பற்றிய செய்திகள் இலக்கியங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன. முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, புறநானூறு, பட்டினப்பாலை நற்றிணை ஆகிய நூல்களின் வாயிலாக மக்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்த செய்தியினை நம்மால் அறிய முடிகிறது.

"புலம்பெயர் மக்கள் கலந்தினிது உறையும்" (Swaminatha Iyer, 1986)

என்னும் பட்டினப்பாலை பாடலில் பட்டினப்பாலை வெளிநாடுகளிலிருந்து மக்கள் புலம்பெயர்ந்து வந்து புகார் நகரில் வாழ்ந்து வந்தார்கள் என்பதனை இதன் மூலம் அறிய முடிகிறது.

"அவன் உறைமுனிந்த ஒக்கலொடு புலம் பெயர்ந்து" (Parimanam & Balasubramaniyam, 2004)

என்னும் நற்றிணைப் பாடலும் சங்க காலத்தில் புலம் பெயர்ந்த செய்தியினை காட்டுகிறது.

## பெண்ணியமும் அதன் நோக்கங்களும்

பெண்ணியம் என்பது அனைத்து வகைப் பெண்களுக்கும் சம உரிமை கிடைக்க போராடுவது ஆண், பெண் இருவரும் சமம் என்பதும் பெண்களுக்கான பொருளாதார சிந்தனையை நிலை நாட்டல். ஆணாதிக்கத்தை அடையாளம் கண்டு அதனை அறவே களைதல், பெண்களின் நலனைப் போற்றுதல், அதனை அடைதல், அடைந்தனவற்றை காத்தல் என்பனவாகும்.

## உனக்காகவா நான் பெண்ணியம்

பெண்ணியம் என்பது ஆண்களுக்கு எதிரான ஒன்று அன்று ஆணாதிக்கத்தை எதிர்ப்பதாகும். பெண்களின் உடல், உள்ள ரீதியாகவும் அடக்கப்பட்ட பெண்ணின் உணர்வுகளை எடுத்து இயம்புவதாக உள்ளது.

அந்த வகையில் "உனக்காகவா நான்" புதினத்தில் பிரகதி என்ற கதாபாத்திரம் ஒரு ஆணாதிக்கம் கொண்ட குடும்ப உறவுகளை கொண்டவள். பெற்ற அப்பா குடும்ப பொறுப்பில்லாமல் இருப்பதும், பாடம் கற்பிக்க வரும் ஆசிரியர் தன் மாணவியை தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதும், திருமணம் செய்ய வரும் ஆண் தவறான கடிதத்தால் மணமேடை வரை வந்த திருமணத்தை நிறுத்துவது என ஒரு பெண் ஆண்களால் நடத்தப்படும் அவலங்களை அனுபவித்துக் கொண்டே வாழ்வதாக உள்ளது.

"வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும்

விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

என்று சொல்லும் நிலை உருவாக வேண்டும். என கனவு கண்டார் பாரதியார். ஆனால் அவர் காண விரும்பிய பெண் விடுதலை இன்னும் முழுமையாக கிடைக்கவில்லை என்றே கூற வேண்டும்.

பிரகதியும் அப்படி தான் நல்ல படிப்பு படித்திருந்தும், திருமணத்திற்கு முன் தந்தையை சார்ந்தும் திருமண வயது வந்த பின்னும் கணவனுக்காக காத்திருக்கும் நிலையில் உள்ளாள். இப்படித்தான். காலங்காலமாகச் சமுதாயத்தில் நிலவி வரும் பெண்களின் நிலையாக உள்ளது.

## முதிர் கன்னிகளாய் பெண்கள்

திருமணத்திற்காகக் காத்திருக்கும் கன்னிப் பெண்களின் எண்ணிக்கை இன்று வரை கூடிக் கொண்டே போகிறது.

"கார்த்திகைத் திங்கள் ஏற்றி

மார்கழிக் கோலங்கள் இட்டு

காத்திருக்கும் பெண்களுக்கு

தை மட்டும் வருவதேயில்லை"

என்று முதிர் கன்னியின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது இந்த ஹைகூக் கவிதை.

இவற்றைப் போலவே நாவலில் வரும் பிரகதி நன்கு படித்திருந்தும் அழகு என்ற ஒன்றை வைத்துக் கொண்டு ஆண்கள் பலராலும் அவளின் திருமணம் தடைப்பட்டது. "வேம்பு கசக்கிறதும் கரும்பு இனிக்கிறதும்" எப்படி அதன் சுபாவமோ அப்படி தான் மனுஷங்களின் சுபாவம். நல்ல வளர்ப்பு, நல்ல படிப்பு இருந்தும் பிரகதியின் திருமணம் தடைப்பட்டதற்கு ஆண்களின் சுபாவமே காரணமாகும்.

## பிரகதியின் மனநிலை (எது துணை?)

ஆம்பளை யாரு? எப்பப் பார்த்தாலும் சூதாடுற அப்பாவா? மொட்டைக் கடுதாசி எழுதுகிற மூர்த்தியா? மொட்டைக் கடுதாசியைப் பார்த்து சந்தேகப்படுகின்றன தனபாலின் அப்பாவா? அப்பா மேலே இருக்கிற மரியாதை, பாசம் என்ற பேரிலே ரோபோ மாதிரி செயல்படுகிற, சுயமா சிந்திக்க மறுக்கிற தனபாலா? குடிச்சுட்டுப் பொண்டாட்டியை அடிக்கிற நாராயணனா? யார் ஆம்பிளை?

ஒரு பெண்ணுக்கு உண்மையான துணை எது? நான் படிச்சிருக்கேன். வேலை செய்கிறேன், சம்பாதிக்கிறேன். என்னால் கடைசி வரைக்கும் தனியா வாழ முடியும். யார் கையையும் எதிர்ப்பார்க்க வேண்டிய அவசியமில்லை. துணை என்றால் என்ன? வெளியே போறப்போ ஒரு பெண்ணுக்கு பாடிகாட்

மாதிரி கூடவே வருவதா? இல்லை என்றால் திருமணம் செய்ய ஒரு ஆம்பளை வேணுங்கறதா? எது துணை? அந்த சின்ன சந்தோஷத்துக்காகப் பெண்கள் கொடுக்கிற விலை ரொம்ப அதிகம்.

கருவை வயிற்றில் சுமந்து, பெத்து, வளர்த்து, ஆளாக்கி தினமும் சமைத்து, துணி துவைத்து, அவர்களுக்கு வயதுயாகிய உடன் எல்லா உதவியும் செய்வது தான் துணையா? இதுக்கு தான் எல்லாரும் கல்யாணம் பண்ணிக்கிறாங்களா? அது எனக்கு எதுக்கு? என பல்வேறு கேள்வி கணைக்களால் அவளின் மனம் அவளை துளைத்து கொண்டிருக்க.

## இனம்புரியாத பரவசம்

இப்படி பலவகைப்பட்ட ஆண்களின் மத்தியில் தருணைப் பார்த்ததும் அவளின் மனதில் இனம் புரியாத பரவசம் காணப்பட்டாள். ஏனென்றால் பெருசா மீசை வச்சுகிட்டு கெத்தா, திமிரோட, கொடூரமா இருக்கிற ஆண்களின் மத்தியில் பதட்டப்படாதவனா, பொறுமைசாலியா, எவ்வளவு கஷ்டம் வந்தாலும் பளீர் என்று சிரிக்கிறவன்.

அப்பா இல்லாத குடும்பத்தில் அம்மா, ஐந்து தங்கைகள் என வேலை செய்து கொண்டே படித்து குருவிகள் தானியங்களை சேர்க்கிற மாதிரி காசை சேர்த்து ஒவ்வொரு தங்கச்சியையும் படிக்க வைத்து கல்யாணம் பண்ணி வைத்திருக்கிறான். இவ்வளவு கஷ்டங்களையும் வீட்டிலே வைத்துக் கொண்டு பொறுமையாகவும், பதட்டம் இல்லாமலும் குழந்தைத் தனமான முகமும், சிவந்த உதடுகளும் வேலைப் பார்த்து உரமேறிய தோள்களும், காய்ந்து போன கைகளும் என அவன் தருணைப் பற்றி நினைத்தும் அவள் மனதில் இனம் புரியாத சந்தோஷத்தில் அவள் மூழ்கி போனாள்.

### அவள் வாழ்விலும் சந்தோஷம் (கலகலப்பான நாள்)

ஆம், முருகன் கோவிலில் வைத்து தருணின் குடும்பத்தை சந்தித்த பிரகதி அன்று தருணின் அம்மாவின் பிறந்த நாள் என்பதால் அவர்களை பிரகதி தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். நீண்ட நாள் கழித்து அன்று தான் பிரகதியின் வீடு கலகலப்பாகவும், குதூகலம் வழியக் காட்சி தந்தது.

பிரகதி நன்றியுடன் தருணைப் பார்த்தாள். அந்த நிறைவும், மகிழ்ச்சியும் அடிக்கடி அந்த இரண்டு குடும்பங்களுக்கும் தேவைப்பட்டது. அந்த இரண்டு குடும்பங்களுக்கும் அடிக்கடி சந்தித்தார்கள். தருணும் பிரகதியும் நிறைய பேசினார்கள். நல்ல ஒரு ஆரோக்கியமான நட்பு மலர்ந்து அது காதலாய் பூத்தது.

## மௌனத்தை கலைத்த தருணம்

“எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது

தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்.” (Thamizhannal, 2010)

மனித குலத்தின் இயற்கை இயல்பே, இன்ப நுகர்வாம் காதல். அது இயற்கையோடு இணைந்த ஒழுக்க நிலை அவற்றை வெளிப்படுத்த பெண், ஆண் என்ற பாகுபாடு தேவையில்லை. அந்த வகையில் இந்நாவலில் வரும் பிரகதியும் ஒரு பெண்ணாக இருந்து ஒரு ஆணிடம் தன் காதலை வெளிப்படுத்தினாள். அதனை ஏற்க மறுத்த தருண் பி.எச்.டி முடித்து விட்டு காலேஜ் லெக்சர் நீங்கள் நானோ சாதாரண பாலிடெக்னிக் முடித்து ஸ்டோர் கீப்பர் என தருண் கூறிய உடன் பிரகதி ஒரு ஆண்களைவிட பெண் அதிகம் படித்திருக்க கூடாதா என கேள்விகணைகளைத் தொடுத்தாள்.

## கணவனின் வாழ்வை உயர்த்துதல்

விரும்பி மணந்த காதலன் தன்னுடன் உறைந்து தன்னையும், வளப்படுத்தி அவனையும் வளப்புடுத்தி வாழும் வாழ்க்கையே பெண்களின் மகிழ்ச்சியான வாழ்க்கை பெற்றவர்களாகின்றனர். இவ்வுரிமை பெறாதவர்கள் துன்பம் மிகுந்த வாழ்க்கை வாழ வேண்டியவர்களாகின்றனர்.

தகர்க்க இயலாத சமுதாயச் சுமைகளை உடைக்கும் வல்லமை பெற்றது செவ்விய காதல் பெண்கள் சமத்துவ வாழ்வை பெறவும், விடுதலை மிக்க வாழ்வை பெறவும், அதிகாரத்தைப் பெறவும் காதல் வழிவகுப்பதாக பெண்ணியவாதிகள் கூறுகின்றனர்.

அந்த வகையில் பிரகதியின் மனக்கண்ணில் சிறு வயதிலிருந்து தன் மனதில் துளிர்விட்டு விருட்சமாய் வளர்ந்திருந்த அவளின் லட்சியம் விமானத்தில் ஏற்படும் கோளாறுகளை சரிப்படுத்தும் ஆட்டோ பைலட்டிங் முறையை செம்மைப்படுத்துவதும், உலகமே இந்தியாவைப் திரும்பிப் பார்க்கும் அளவுக்கு ராணுவத் தளவாடங்களின் தொழில் நுட்பத்தை உயர்த்துவது என பல கனவுகளையும் தூக்கி எறிந்து விட்டு கல்யாண வாழ்க்கையில் நுழைந்தாள்.

திருமணத்திற்குப் பின் பிரகதி தருணின் ஒர்க் ஷாப்பில் மெல்ல எல்லா வேலைகளையும் கற்றுக் கொண்டாள். அவளின் ஆர்வமும் துடிப்பும் சேர்ந்து தன் தொழிலை விரிவாக்கி அத்தொழில் பெண்களையே வேலைக்கும் அமர்த்தினாள். பின் மிகப்பெரிய லாரி நிறுவனத்தின் லாரி பழுது பார்க்கும், பராமரிக்கும் ஏஜெண்டாக தருணை நியமித்து அவனை வாழ்வில் உயர்த்தினாள். பின் அவனுக்கு அப்பா என்ற உயர்ந்த பதவியிணையும் தந்தாள்.

## முடிவுரை

அடங்கிக் கிடக்கும் அடிமைகளாய், ஒடுங்கிக் கிடக்கும் அடிமைகளாய் இருந்த நிலையிலிருந்து பெண்கள் மாறியுள்ளனர் என்பதையும் தம்மைப் புறக்கணித்து, நசுக்க நினைக்கும் சமுதாயத்தை எதிர்த்து குரல் கொடுக்கும் அளவிற்கு கருத்து சுதந்திரமும் துணிவும் பெற்றுள்ளனர். பெண்கள் பல ஆண்களால் துன்பங்களை மட்டுமே அனுபவித்த பிரகதி ஒரு ஆணின் அன்பில் உறைந்து அவனையும் வாழ்க்கையில் உயர்த்தியுள்ளாள். இந்நாவல் பெண்கள் நினைத்தால் எதையும் சாதிக்கலாம் என்பதே ஆசிரியரின் கருத்தாக உள்ளது.

## References

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Swaminatha Iyer, U.V. (1986) Pathupaattu Moolamum Uraiyum, U, Ve, Sa., Library, Chennai, India.

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

Thilagavathy, (2007) Unagakava Nan, Amrudha Pathippagam, Chennai, India

Varadharasan, M. (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License